# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.15939/F/2024**

திரு R. அறிவழகன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
குமாரபாளையம் - 638 183, நாமக்கல் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 01.10.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 25.11.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 07.11.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 06.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு R. அறிவழகன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருஎஸ்.கே. செல்வராஜீ, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், கிராம நிர்வாக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், பாப்பம்பாளையம் ஊராட்சி, அப்பநாயக்கன்பாளையம் கிராமத்தின் பிரிதான சாலையிலிருந்து இடதுபுறமாக ஒரு பொதுப்பாதை பிரிந்து செல்கிறது. சாலையின் முகப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அதனை அடுத்து கொங்கு திருமண மண்டபம் செல்லக்குமாரசாமி கோவில் உள்ளது. மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி மற்றும் அதனையொட்டி உள்ள இடத்தில் அரசுக்கு

சொந்தமான நிலம் உள்ளதா என்பது பற்றிய விவரம், அந்த நிலத்தின் வகைப்பாடு என்ன அந்த நிலத்தின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு, அந்த நிலத்தின் நான்கு எல்லைகளின் அளவு என்ன, அந்த நிலத்தின் சர்வே எண், "அ" பதிவேடு நகல் மற்றும் வரைபட நகல் உள்ளிட்ட முழு விவரங்கள், மேற்கண்ட பொதுப்பாதையில் எவரேனும் ஆக்கிரமிப்பு செய்து இருந்தால் அது குறித்து யாரிடம் புகார் செய்யவேண்டும் என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 11 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய அனைத்து தகவல்களும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அத்தகவல்களை பெற்றுக்கொண்ட மனுதாரர், அனைத்து தகவல்களும் பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக தனக்கு வழங்கப்பட்டுள்ளது என ஏற்பளிப்பு செய்த 15.04.2025 தேதியிட்ட அவரது எழுத்துப்பூர்வமான கடித நகலினை இவ்வாணையத்தின் பார்வைக்கும் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். ஆணையம் அதனை பதிவு செய்து, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.15939/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குமாரபாளையம் - 638 183, நாமக்கல் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.15939/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு R. அறிவழகன், த/பெ. M. ரங்கநாதன்,
எண்.3/237_A, விளாங்காட்டூர்,
காடச்சநல்லூர் - 638 008,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

Copy to: File
SNPS / 21.04.2025